செ.வெ.எண்.473/2021 நாள்.21.10.2021

# திருப்பத்தூர் வட்டம், ஆதியூர் ஊராட்சி இரவத்தம்பட்டி வால்ஏரியில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் சார்பில் வடகிழக்கு பருவமழை போலி ஒத்திகை பயிற்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திருப்பத்தூர் வட்டம், ஆதியூர் ஊராட்சி இரவத்தம்பட்டி வால்ஏரியில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் சார்பில் வடகிழக்கு பருவமழை போலி ஒத்திகை பயிற்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

திருப்பத்தூர் வட்டம், ஆதியூர் ஊராட்சி இரவத்தம்பட்டி வால்ஏரியில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் சார்பில் வடகிழக்கு பருவமழையொட்டி போலி ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிழ்வில் ரப்பர் படகு, கயிறு மூலம் மீட்புப்பணி, லைப் பாய், லைப் ஜாக்கெட், 5 லிட்டர் குடிநீர் பாட்டல் பயன்படுத்தி மீட்புப்பணி, கை மற்றும் கால்களை பயன்படுத்தி பல்வேறு மீட்புப்பணிகள், வாழை மரம் பயன்படுத்தி மீட்புப்பணி, மூங்கில் மூலம் மீட்புப்பணி உள்ளிட்ட பல்வேறு மீட்புப்பணிகள் நடைபெற்றது.

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 5 தன்னார்வளர்களுக்கு மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் சார்பில் மீட்புப்பணிகள் குறித்து பயிற்சி வழங்கப்பட்டு அவர்களை தாயார்படுத்தபட வேண்டும். நமது மாவட்டத்தில் உள்ள பொது மக்கள் அனைவரும் தங்களின் குடும்பத்தில் உள்ள சிறுவர் மற்றும் சிறுமிகளை அருகில் உள்ள குளம், குட்டை, கினறு மற்றும் ஏரி ஆகிய இடங்களுக்கு போகாதவாறு கண்காணித்துக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட தீயணைப்பு அலுவலர் திரு.சி.இலட்சுமிநாராயணன், உதவி மாவட்ட தீயணைப்பு அலுவலர் திரு.ச.பழனி, வட்டாட்சியர் திரு.சிவபிரகாசம், ஆதியூர் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.மணிமேகலை ஆனந்தகுமார், ஊராட்சி செயலர் திரு.கோபிநாதன் மற்றும் பொது மக்கள் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**